ஸ்ரீ திரிபுரிசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

சரீரத்தினுள் சிறந்த சிலபாகமும் மற்றபாகங்களும் ஒன்றுபட்டாலன்றி சாரீரமான கார்யங்கள் நிறைவேறமாட்டா. தலை எல்லாவற்றிற்கும் மேல்நின்று தன்னிடத்தமைந்துள்ள ஞானேந்திரியங்களால் விஷயங்களையும் பிரகாசிக்கவும், கீழ்பாகத்திலமைந்துள்ள கை, கால் முதலிய கர்மேந்திரியங்கள் வேண்டியவைகளை எடுத்தல் வேண்டாதவைகளை விலக்கல் உசிதமானவைகளை உட்கொள்ளல் வெளிப்படவேண்டியவைகளை வெளியேற்றல் முதலியவைகளைச் செய்யவும் பரஸ்பரம் உதவிபுரிந்துகொண்டிருக்குமானால் சரீரத்தால் நடக்கவேண்டிய கார்யங்கள் நடைபெறும். தலை—மேல் நின்று கண் காது முதலிய கருவிகளால் மேடு பள்ளம் குண்டு குழி கல்லு முள்ளு முதலியவைகளை பிரகாசிப்பிக்காவிடில் கால் தன் வேலையைச்செய்யினும்,குண்டு குழிகளிலிடறிவிழுந்து முறிபட்டுக் கஷ்டத்தை விளைவிக்குமேயன்றி நன்மையை யுண்டாக்காது. ஞானேந்திரியங்கள் விஷயங்களைப் பிரகாசிவிப்பித்தும் அதற்குத்தக்கபடி உசிதமான முறையில் கன்மேந்திரியங்கள்வேலை செய்யாவிடில் எவ்வித போகமும் நேரப்போவதில்லை. ஆகவே இரண்டும் ஒற்றுமையடைந்து தம்தம் வேலையைச்செய்தால் சரீரம் சுகமாய் நிற்கும். இதுபோல் நம் பாரதபூமியை ஒரு சரீரமாக பாவிப்போமாகில் அது சுகமாக வாழ்வதற்கு அதில் வஸிக்கின்ற மனிதர்கள் தம்தம்வேலையை பிறருக்குமுபகாரமாகும்படிசெய்து பரஸ்பரமொத்துவாழ்வதே முக்கியகாரணம். அப்படித்தான் நம்முன்னோர்கள் நடந்து நன்மையை அடைந்தார்களென்பது சரித்திர ஆராய்ச்சி செய்வோருக்குத் தெரியாமலில்லை. ஆயினும் தற்போது காலக்கொடுமையினால் பாரதவாஸிகளுள் ஒற்றுமையில்லாமல் பாரதபூமி தத்தளித்துக்கொண்டிருக்கிறது; எங்குபார்த்தாலும் ஒரு வகுப்பாரை மற்றொரு வகுப்பார் தாக்குவதாகத்தான் காணப்படுகின்றது. பொது நலத்திற்குப்பாடு படுகிறேனென்று சொல்லிக்கொள்ளும் பத்திரிகாப் பிரசாரகர்களும் இதர நிந்தைகளாலேயே பத்திரிகை முழுமையும் பூர்த்தி செய்து பிரசுரிக்கின்றார்கள், சில வகுப்பரரிடம் உண்மையில் தோஷமிருப்பதாகத் தெரிந்தால் அதைத்திருத்தி அவர்களையும் ஸரிப்படுத்திக் கொண்டு பிரவிருத்தி செய்தால் பொதுகார்யம் பூர்ணமாய் ஸித்திக்குமேயன்றி அவரை தூஷித்துத்தள்ளிவிட்டு பல கக்ஷிகளாகப் பிரிந்துவிட்டால் பொதுநலம் எங்கு ஸித்திக்கும். ஆகையால் இதனுண்மையை அறிந்தவர்கள் பாரதவாஸிகள் பல பிரிவுகளாகப் பிளந்துபோகாமல் ஒற்றுமைத்துப் பாரதநாடு க்ஷேமத்தோடு செழித்தோங்கும்படி செய்வார்களாக.

பத்திராதிபர்.

அத்வைத மதம் வைதிகம்.

(278-வது பக்கத்தொடர்ச்சி)

முதலில் தர்மம் அர்த்தம் என இரண்டும் சுகரூபமாயில்லாமல் சுகஸாதனரூபமாய் அதனால் கௌணபுருஷார்த்தமாய் ஒரே ஜாதியையுடையதாதலாலும் அவ்விதமே காமம் மோக்ஷம் என இரண்டும் சுகரூபமாய் அதனால் முக்கிய புருஷார்த்தமாய் ஒரே ஜாதியையுடையதாதலாலும் தர்மம் காமம் அர்த்தம் மோக்ஷம் என்று ஒருஜாதிக்குள் மற்றொரு ஜாதியைக் கலக்காமல் தர்மம் அர்த்தம் என்று ஒரு ஜாதியைக்கூறிவிட்டுப் பிறகு காமம் மோக்ஷம் என்று மற்றொரு ஜாதியைக் கூறியது. அதிலும் காரணம் முன் இருக்க காரியம் பின் ஏற்படுவது கார்யகாரணபாவ முறையாதலின் அதையனுஸரித்துச் சுகத்திற்குக்காரணமாயுள்ள தர்மம் அர்த்தம் இரண்டையும் முதலிலும் அதன் கார்யமான சுகத்தின் ஸ்வரூபமாயுள்ள காமம் மோக்ஷம் இரண்டையும் பிறகும் கூறியது. தர்மம் அர்த்தம் இரண்டும் சுகஸாதனமாவதும் காமம் மோக்ஷம் இரண்டும் சுகமாவதும் எவ்விதமென்பது அவற்றின் ஸ்வரூபம் இன்னதென்று தெரிந்த பின்புதான் விளங்குமாதலால் அவற்றின் ஸ்வரூபம் இன்னதென்பதை முதலில் விசாரிப்பாம்.

தர்மம் என்பது வேதத்தில் ஸ்வதந்திரமாகவும் श्रुतेरिवार्थं स्मृतिरन्वगच्छत् ,,வேதத்தின் பொருளை ஸ்மிருதி அனுஸரிப்பது போல் காமதேனுவின் புத்திரியாகிய நந்தினியை அனுஸரித்து அதைமுன் செல்லவிட்டு அதன் பின்னால் திலீப மஹாராஜன் சென்றான்'' என்றுசாஸ்திரங்களின் பரமஸித்தாந்த ரஹஸ்யங்களை சாஸ்திர ஆராய்ச்சியில்லாத பாலர்கள் முதல் அறியுமாறு மிகவும் லளிதமாகப்புகட்டும் மஹாகவியும் பரமாத்வைதியுமான காளிதாஸனுடைய உயர்ந்த ஸூக்தியின்படிவேதத்தை அனுஸரித்தால் அனுஷ்டானத்திற்கு உபயோகப்பட்டுப் பிரமாணமாவதும்வேதத்திற்கு விரோதப்படுமிடத்தில் அனுஷ்டானத்திற்கு உபயோகப் படாது அப்பிரமாணமாவதுமான ஸ்மிருதி, புராணம் இதிஹாஸம், ஆகமம், சிஷ்டாசாரம், ஸாதுக்களின் ஆத்மதுஷ்டி, முதலிய

தில் சுருதிமூலமாகவும் மனுஷ்யர்களுக்கு வர்ணாச்ரமங்களுக்குத் தக்கவாறு செய்யும்படி விதிக்கப்பட்ட நித்தியம், நைமித்திகம், காம்யம் முதலிய பிறிவையுடைய யாகம் முதலியகர்மமாம். காளிதாஸன் பரமாத்வைதி என்பதை காளிதாஸக்ரந்தங்களின் ஆராய்ச்சியினால் மற்றொரு உபந்யாஸத்தில் நிரூபிப்போம்.

அதர்மம் என்பது அதற்கு மாறாக வர்ணாச்சிரமங்களுக்குத் தக்கவாறு செய்யகூடாது என்று விலக்கப்பட்ட களஞ்சபக்ஷணம் பிராணிஹிம்ஸை ஸுராபானம்முதலியதாம். இவ்விதம்தர்மத்தின் இலக்கணம் चुद्प्रेरणे என்னும் தாதுவிலிருந்து உண்டான चोदना என்னும் சப்தத்தால் சொல்லப்பட்ட இதைச்செய் அதைச்செய் என்று அதிகாரியைப் பிரவர்த்திக்கச்செய்யும் வேதத்திலுள்ள விதி வாக்யங்களால் ஸ்வதந்திரமாகவும், அதைஉபஜீவிக்கும் (தான் பிரமாணமாவதற்கு அதை அனுஸரிக்கும்) ஸ்மிருதி புராணாதிகளால் அதை அனுஸரித்தும் தெரிவிக்கப்படுவதும் அவ்வித சப்தபிரமாணங்களைத்தவிர மற்ற பிரத்தியக்ஷம் அனுமானம் முதலிய பிரமாணங்களால் தெரிவிக்கமுடியாததும் அர்த்தமும் அதாவது பிரபலமாகிய நரகம் முதலிய அனிஷ்டத்தைக்கொடுக்காது சுகத்தைக் கொடுப்பதுமான வஸ்து தர்மமெனப்படும்" என்றுபொருளுடைய चोदनालक्षणोऽर्थोधर्मः என்னும் பூர்வமீமாம்ஸையின்முதல் அத்யாயம் முதல் பாதம் இரண்டாம் ஸூத்திரத்தில் பகவான் ஜைமினி மஹர்ஷியினால் அருளப்பட்டிருக்கிறது.

ஸூத்திரத்தில் வேதத்தின் விதிவாக்கியத்தால் தெரிவிக்கப்பட்டது என்னும் பொருளுடைய चोदनालक्षणः என்னும் பதம் ஸுகஸாதனமானதால் அர்த்தரூபமாயும், அவர்களின் ராகத்தினால் பிராப்தமானதுமான போஜனம் முதலியது தர்மமாகக் கூடாது என்னும் கருத்தினால் போடப்பட்டிருக்கிறது. போஜனம் முதலிய தர்மமுமாகாது அதர்மமுமாகாது உதாஸீனமாகிய கர்மம் चोदनालक्षणः என்னும் பதத்தினாலேயே வேதம் அதை உபஜீவிக்கும் ஸ்மிருதிபுராணம் முதலியது இவைகளில் விதிக்கப்படாமல் பௌத்தாகமம் முதலிய வேதவிருத்த நாஸ்திக கிரந்தங்களில் விதிக்கப்பட்ட சைத்யவந்தனம் முதலிய கர்மங்களும் தர்மங்களல்லவென்று விலக்கப்பட்டன.

வேதத்திலும் வேதானுஸாரி கிரந்தங்களிலும் தவிர மற்ற விடத்தில் பிரதிபாதிக்கப்படுவது தர்மமல்லவென்பதைப் பிறகு வேதப்பிராமாண்ய நிரூபண கட்டத்தில் நன்கு நிரூபிப்போம்.

பிரபலமாகிய அனிஷ்டத்தைக் கொடுக்காதது என்னும் பொருளுடைய अथ: என்னும் பதம் 'சத்துருக்களுடைய வதத்தை விரும்பினவன் ச்யேனம் என்னும் யாகத்தால் சத்துரு வதத்தை ஸம்பாதிக்கக்கடவன்' என்னும் வேத வசனத்தால் சத்துருவதம் என்னும் பலத்தை உத்தேசித்து விதிக்கப்பட்ட ச்யேனயாகம் முதலியது தர்மமாகக்கூடாது. என்னும் கருத்தினுல் போடப்பட்டிருக்கிறது

"பிராமணர்களைக் கொல்லக்கூடாது" ஒருபிராணிகளையும் ஹிம்ஸிக்கக்கூடாது, नाभिचरितव्यं 'சத்துருவதமாகிய அபிசாரம் செய்யக்கூடாது' என்பது முதலிய வசனத்தினுல் விலக்கப்பட்டபடியால் அதர்மம். அதர்மமானதால் அதை அனுஷ்டிப்பதற்கு நரகம் முதலிய பிரபலமான அனிஷ்டம் ஏற்படுமானதுபற்றி ச்யேனயாகம் அனர்த்தமானதால் अथ: என்னும் பதத்தினுல் அது விலக்கப்பட்டது.

ஈண்டு ஓர் ஆசங்கை நிகழ்கின்றது. அதாவது अथ: என்னும் பதத்திற்கு இவ்விதம் பிரயோஜனங்கூறுவது பொருந்தாது. ஏனெனில் அந்தப்பதத்தினுல் அனர்த்தமாயுள்ளசோதனுலக்ஷணமானது விலக்கப்படவேண்டும். பிரும்மஹத்திகளஞ்சபக்ஷணம் முதலியது அனர்த்தமாயிருந்தபோதிலும் அது चोदनालक्षण: என்னும் பதத்தினுலேயே விலக்கப்பட்டுவிட்டது. ஏனெனில் பிரும்மஹத்தி முதலியது வேதவாக்யத்தினுல் செய்யும்படி விதிக்கப்படுவதில்லை. चोदना என்னும் பதமானது கீழ்காட்டியபடி பிரவிருத்தி செய்விக்கும் விதிவாக்கியம் என்றுபொருளுடையது. लक्षण: என்னும்பதம் பிரமாணமாயுடையது. என்று பொருளுடையது ஆகையினுல் பிரும்மஹத்தி முதலிய பிராணிஹிம்ஸை வேதத்தில் விதிக்கப்படாததாலது சோதனுலக்ஷணமாகாதபடியால் அதை விலக்க அர்த்தபதம் வேண்டியதில்லை, ச்யேனயாகம் வேதவாக்யத்தில் விதிக்கப்பட்டு சோதனுலக்ஷணமானபொழுதிலும் அதை அர்த்தபதம்விலக்காது. ஏனெனில் ச்யேனம்முதலியதுவேதத்திலுள்ள விதிவாக்யத்திற்கு விஷயமாயிருப்பதால்,

" विधिस्पृष्टे निषेधानवकाशः "

வேதத்தினால் விதிக்கப்படும் விஷயத்தில் வேதத்தின் நிஷேதத்திற்கு [விலக்குதலுக்கு] அவகாசமில்லை என்கிற நியாயப்படி அது வேதத்தினால் நிஷேதிக்கப்படாததானதால் அது அனர்த்தரூபமாகாதபடியால் அது அர்த்தபதத்தினால் எப்படி விலக்கமுடியும். சியேனயாகம் சத்துருவிற்கு மரணத்தைச் செய்கின்றபடியால் பிராணிஹிம்ஸையானது ஒரு பிராணியையும் ஹிம்சிக்கக்கூடாது என்று சாஸ்திரத்தினால் நிஷேதிக்கப்பட்டிருப்பதால் சியேன யாகம் அனர்த்தரூபமாகுமென்றால் அதுவும் பொருந்தாது. ஏனெனில் சாஸ்திரத்தினால் விதிக்கப்பட்டுச் சாஸ்திரத்தினாலேயே தடுக்கப்படுவது அனர்த்தரூபமாயாகமாட்டாது. அவ்விதம் அனர்த்தரூபமாகுமானால் அனர்த்தரூபமான அக்கார்யத்தை விதித்த வேதம் வஞ்சகன் வசனம்போல் அனாப்தவசனமாய் அதனால் அப்பிரமாணமாமுடியும்சிறந்த பிரமாணமாகியவேதம்அப்பிரமாணமாவது உசிதமன்று. அவ்விதம் சாஸ்திரத்திலேயேவிதித்துச்சாஸ்திரத்திலேயேதடுத்தால் என்ன அபிப்பிராயம் அங்குகொள்ளுகிறது என்றால் கூறுவாம்.

ஒரு பிராணியையும் ஹிம்சிக்கக்கூடாது என்று தடுத்த வேதமே, யாகத்தில் அக்னீ ஸோமன் என்னும் தேவதைகளுக்காகப் பசுவை (அதாவது மேஷத்தை) வதம் செய்யவேண்டும் என்பது முதலிய வசனங்களினால் பசுஹிம்ஸையை விதித்திருப்பதால் 'தீர்த்தமாகிய யாகம் முதலிய இடத்தைத் தவிர மற்றவிடத்தில் பிராணிகளைகளை ஹிம்சிக்காமலிருந்துகொண்டு' என்று கிருஹஸ்தன் இருக்கவேண்டிய முறைகளைக் காட்டவந்த சாந்தோக்யோபனிஷத் வாக்கியம் ஸங்கோசம் செய்துகாட்டியபடி ஸாமான்ய விதியாகிய ஹிம்சிக்கக் கூடாது என்னும் வாக்யத்தை யாகத்தில் ஹிம்சிக்கலாம் என்று விசேஷவிதியைக் கொண்டு ராஜாங்க ஸம்பந்தமான சட்டங்களில் பொது ரூல்களை விசேஷமான ரூல்களை அனுசரித்து மாத்துவது உலகானுபவமாயிருப்பதுபோல்ஸர்வேசுவரனாகிய பரமசிவனுடைய சட்டரூபமான வேதத்திலும் ஸங்கோசம் செய்து அதனால் யாகத்தில் ஹிம்ஸை செய்வது அனர்த்தம் இல்லையென்றும் மற்றவிடத்தில் ஹிம்ஸைசெய்வது அனர்த்தம் என்றும் அபிப்பிராயம் கொள்வதுதான் உசிதம். இது பூர்வ

மீமாம்ஸாசாஸ்திரத்தில் வெளிப்படையான ஸித்தாந்தம். உத்தர மீமாம்ஸையிலும் மூன்றாவது அத்தியாயம் முதல் பாதத்தில்

अशुद्धमिति चेन्न शब्दात् ।

யாகம் பசுஹிம்ஸையால் அசுத்தமெனில் அது சரியன்று. சாஸ்திரத்தில் பசுஹிம்ஸையை விதித்திருப்பதால் அது சுத்தமேயென்று கூறப்பட்டிருக்கிறது.

ஆதலால் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டு சாஸ்திரத்தில் தடுக்கப்படுமானால் அது அனர்த்தமாகாது. இந்த விஷயத்தை அஹிம்ஸா தர்மம் என்றும் மற்றொரு உபன்யாசத்தில் விஸ்தாரமாய் நிரூபிப்போம். இவ்விதமே, 'அதிராத்ரம் என்னும் ஸோமயாகத்தில் ஷோடசி என்றும் பாத்திரத்தில் ஸோமரஸத்தை க்ரஹிக்கவேண்டும் என்று சாஸ்திரத்தில் விதித்து அதிராத்திரயாகத்தில் ஷோடசி பாத்திரத்தில் ஸோமரஸத்தைக் கிரஹிக்கவேண்டாம் என்று அதே சாஸ்திரத்தினால் தடுக்கப்பட்டால் அந்த இடத்தில் ஷோடசிக்ரஹம் செய்தாலும் செய்யலாம் செய்யாமலுமிருக்கலாம். ஆனால் செய்தால்பலம் அதிகம், செய்யாமலிருந்தால்பலம்குறைவு யாகத்திற்கு லோபமில்லை என்று ஸாமான்யவிசேஷபாவம் கூற முடியாதவிடத்தில் विधि प्रतिषेधाभ्यां विकल्पः விதியும் நிஷேதமும் இருக்குமிடத்தில் விகல்பம் என்கிறபடி விகல்பமே தவிர ஷோடசிக்ரஹணம் செய்தால் அனர்த்தம் என்பது கிடையாது. ஆகையினால் சாஸ்திரத்தில் விதிக்கப்படாது கேவலம் நிஷேதிக்கப்படுவதாகிய பிரும்மஹத்தி முதலியதுதான் அனர்த்தரூபமாக ஆகும். இக்கருத்தையே,

'यद्यपि स्याद्विधिस्पृष्टे निषेधो नैव तादृशि ।
विज्ञायते ह्यनर्थत्वं षोडशिग्रहणादिवत् ॥'

விதிக்கப்படும் சில விஷயத்தில் நிஷேதமும் சாஸ்திரத்தில் இருக்கிறது. ஆனாலும் அவ்விதம் விதிக்கப்பட்டு நிஷேதிக்கப்படும் விஷயத்தில் ஷோடசிக்ரஹணம் முதலியதில் போல அனர்த்தமாந்தன்மை அறியப்படவில்லை என்றும் சுலோகத்தினால் ஸுப்ரம்மண்யாவதாரபூதர்களாய் பௌத்தாதி நாஸ்திக மதங்களாகிய விஷ விருக்ஷங்களை வேரோடு அறுத்து வைதிகவர்ணாச்ரம தர்மங்களாகிய கல்பவிருக்ஷங்களைப் பாரதவர்ஷமாகிய இக்கர்மபூமியில் பயிராக்கி லோகத்திற்கு மஹோபகாரம் செய்த குமாரிலபட்டபாதாவர்கள்

வார்த்திகம் என்றும் உயர்ந்த கிரந்தத்தில் விளக்கியிருக்கிறார்கள். ஆகையினால் சியேன யாகம் அனர்த்தமாகாது.

இதுகாறும் சியேனயாகம் ஹிம்ஸை என்றுஒப்புக்கொண்டு அது ஹிம்சிக்கக்கூடாது என்று விலக்கப்பட்டிருந்தாலும் விதிக்கப்பட்டு இருப்பதால் யாகத்தில் உள்ளபடி பசுஹிம்ஸையைப் போல் அந்தவிடத்தில் ஸாமன்ய விதியை ஸங்கோசம் செய்து அதனால் சியேனம் அனர்த்தம் இல்லையென்று நிரூபித்தோம். உண்மையில் சியேனயாகமே, ஹிம்ஸையன்று ஹிம்ஸையாயிருந்தாலன்றோ அது ஹிம்ஸிக்கக் கூடாது என்றும் சாஸ்திரத்தினால் விலக்கப்பட்டதால் அனர்த்தமென்று ஒருக்கால் கூறமுடியும். ஆனால்சியேனயாகத்தின் பலம் ஹிம்ஸை, அதையே அபிசாரம்என்று சொல்வது. அபிசாரம்ஹிம்ஸைமாரணம்(மரிக்கச்செய்தல்)வதம் என்னும் பதங்கள்ஒரேபொருளையுடையபர்யாயச்சொற்கள்.ஆகையால்சியேனயாகத்தா லுண்டானசத்துருக்களின் ஆயுஸ்பாக்கியம் முதலியதின் छेदनं நாசம்செய்தலாகியஅபிசாரமேசத்துருவின்மாரணத்தைக் கொடுப்பதால் ஹிம்ஸை. அதற்குக்காரணமாகிய சியேனம்ஹிம்ஸையன்று. எந்த வியாபாரத்திற்கு அடுத்தாற்போல் உடனே மாரணம் ஸம்பவிக்கின்றதோ அதுதானே ஹிம்சை என்று சொல்லப்படும். சியேனயாகத்திற்கு அடுத்தாப்போல் சத்துருவின் மாரணம் ஸம்பவிக்கிறதில்லை. பின்னையோவென்றால் சியேனயாகத்தினால் சத்துருவின் ஆயுஸ் பாக்யம் முதலியதைத் தொலைத்து விட்டால் பிறகு அதனால் சத்துருவிற்கு மாரணம்ஸம்பவிக்கின்றது. ஆகையால் சியேனயாகம் ஹிம்ஸையாகாது. இக்கருத்தே.

हिंसाहि फलमेतेषां भिन्नातेभ्यस्स्वरूपतः ।
साहिप्राणवियोगात्मा श्येनस्तत्रासिवत् पृथक् ॥

"ச்யேனயாகம் முதலியதுகளுக்கு ஹிம்ஸையென்பது பலம், அது சியேனம் முதலியவைகளைக்காட்டிலும் ஸ்வரூபத்தால் வேறானது. ஹிம்சையென்பது பிராண வியோகத்திற்கு அதாவது மாரணத்திற்கு ஹேதுவான வியாபாரம். அந்தவிடத்தில் சியேனம் கத்தியைப்போல் ஹிம்ஸையைக்காட்டிலும் வேறானது. அதாவது எவ்விதம் கத்தியே ஹிம்ஸையன்று, கத்தியினால் ஏற்படும் வெட்டுதலே ஹிம்சையென்று சொல்லப்படுகின்றதோ

அவ்விதமே சியேனமே ஹிம்ஸையன்று. சியேனத்தினால் ஏற்படும் அபிசாரமாகிய சத்துருவின்ஆயுர்பாக்யச்சேதனமே ஹிம்சை" என்று வார்த்திகத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் சியேன பலமாகிய ஹிம்ஸை ராகப்பிராப்தமாகிய பலத்தில் விதியில்லை. தெரியாத அந்தப் பலத்தின் ஸாதனத்தில்தான் விதி என்கிற மீமாம்ஸாஸித்தாந்தப்படி சாஸ்திரத்தில் விதிக்கப்படாது ஹிம்ஸிக்கக்கூடாது என்னும் சாஸ்திரத்தால் விலக்கப்பட்டதால் அனர்த்தமேயல்லாது சாஸ்திரத்தால் விதிக்கப்பட்ட அதன் ஸாதனமாய் ஹிம்சையினின்றும் வேறான சியேனம் அனர்த்தமன்று. ஆதலால் அது அர்த்தபதத்தால் விலக்கமுடியாது அதன்பலமாகிய ஹிம்ஸை சாஸ்திரத்தால் விலக்கப்பட்டு அனர்த்தமானாலும் அது சோதனாலக்ஷணமாகிய விதி விஷயமாகாதபடியால் அது சோதனா லக்ஷணபதத்தாலேயே விலக்கப்பட்டதால் அதை விலக்க அர்த்தபதம் வேண்டுவதில்லை. ஆதலால் அர்த்தபதத்தால் விலக்கப்படக்கூடிய சோதனா லக்ஷணமும் அனர்த்தமுமாயுள்ள விஷயம் இல்லாததால் அர்த்தபதம் பிரயோஜனமுள்ளதன்று என்று ஆசங்கை.

இதற்கு ஸமாதானம் கூறுவாம். சோதனாலக்ஷணமாகிய சியேனயாகம் சாஸ்திரத்தினால் விதிக்கப்பட்டுச் சத்துரு ஹிம்ஸையாகிய இஷ்டத்திற்குச் சாதனமாய் ஸ்வரூபத்தினால் அனர்த்தமாகாதபோனாலும் அதன் பலமாகிய சத்துரு ஹிம்ஸை சாஸ்திரங்களில் செய்யென்று விதிக்கப்படாமல் ஹிம்ஸிக்கக்கூடாது என்று விலக்கப்பட்டுமிருப்பதால் அதனால் நரகமாகிய அனர்த்தத்தைக் கொடுத்து அனர்த்தமாவதால் அதன் ஸாதனமாகிய சியேனயாகமும் பல துவாரமாக அனர்த்தமாவதால் அதுவேயண்டு அர்த்தபதத்தால் விலக்கப்படும் விஷயம். எது நேரிலோ அல்லது பலத்தின் மூலமாய்ப் பாம்பரையாகவோ அனர்த்தத்தைக்கொடுத்து அனர்த்மாகாதோ அதுதான் தர்மம் என்று லோகத்தில் பிரஸித்தம். ஆதலால் சியேனம் தர்மமில்லையென்று விலக்கப்படவேண்டியதுதான் இக்கருத்து.

फलतोऽपिचयत् कर्मनानर्थेनानुबद्ध्यते ।
केवलप्रीतिहेतुत्वात्तद्धर्म इति कथ्यते ॥

"எந்தக் கர்மாவானது ஸாக்ஷாத்தாகவும் பல துவாரமாகவும் அனர்த்தத்தோடு ஸம்பந்தப்படுகிறதில்லையோ அந்தக்கர்மாவோ

அனர்த்தத்தைக் கொடுக்காமல் கேவலம் பிரீதிக்கு ஹேதுவாயி ருப்பதால் தர்மம் என்று சொல்லப்படுகின்றது" என்னும் வார்த் திகத்திலும் தெரிவிக்கப்பட்டிருகின்றது. ஆகையால் பலதுவாரா வாக அனர்த்தமாயுள்ள சியேனயாகத்தை விலக்குவதே அர்த்தப தத்தின் பிரயோஜனம் என்பது பொருத்தமே. சியேனமாகிய எது சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டதோ அது நேரில் அனர்த்தமன்று. அதன் பலமாகிய யாதொரு சத்துரு ஹிம்ஸை அனர்த்தமோ அது சாஸ்திரத்தில் விதிக்கப்படவில்லையென்று சாஸ்திரத்திற்கு ஒருவிததோஷமுமில்லாமல் போனலும் அப்படியாவது பரம்பரை யாய் அனர்த்தத்தைச் சாஸ்திரம் விதிப்பானேன் என்றும் விஷ யத்தை மேல் சாஸ்திரத்தின் நோக்கத்தைக் கூறுமிடத்தில் விசா ரிப்போம்.

ஈண்டு அனர்த்தரூபமென்று விலக்கப்பட்ட சியேன யாக மானது பார்யையை அபஹரித்தல் முதலிய ஸரியான கோப காரணங்களில்லாது வெறும் கோபத்தால் சத்துருவை ஹிம்ஸிக்கவேணுமென்று செய்யப்பட்ட சியேனயாகம். பார் யாபஹாரம் முதலிய நிமித்தத்தால் செய்யப்பட்ட சியேனயாகம் அனர்த்தமன்று அர்த்தமே, ஏனெனில்

अग्निदो गरदश्चैव शस्त्रपाणिर्धनापहः ।
क्षेत्रदारहरश्चैव षडेतेह्याततायिनः ॥

"வீட்டில் நெருப்பை வைத்தவன், விஷத்தைக்கொடுத்தவன், ஆயுதத்தைக் கையில் தரித்துக்கொண்டு சண்டைக்கு வருபவன், பணத்தை அபஹரித்தவன், பூமியை அபஹரித்தவன், பார் யையை அபஹரித்தவன் ஆக இந்த ஆறுபேர்கள் ஆததாயிகள் என்று சொல்லப்படுகின்றார்கள்" என்று கூறப்பட்ட ஆறுவித மான ஆததாயிகளை எடுத்துக்கொண்டு षडेतानभिचरन्नयजेत इந்த ஆறுவிதமான ஆததாயிகளையும் ஹிம்ஸிக்க சியேனயாகம் முதலி யது செய்யலாம்" என்று போதாயண மகர்ஷியினல் கூறப்பட்டி ருப்பதாலும்

आततायिनमायान्तं हन्यादेवा विचारयन् ।

"கீழ்ச்சொல்லிய ஆததாயியால் வருபவனை விசாரிக்காமலே கொல்லவேண்டும்.

नाततायिवधे दोषा हन्तुर्भवति कश्चन ।

"ஆததாயியின் வதத்தில் வதம் செய்தவனுக்கு ஒருவித தோஷமும் கிடையாது" என்று மனுஸ்மிருதியில் கூறியிருப்பதாலும் பார்யாபஹாரம் முதலிய கோபகாரணங்களால் செய்யப்பட்ட சியேனயாகம் அனர்த்தரூபமாகாதபடியால் அதைத்தவிர மற்ற காரணங்களினால் செய்யப்பட்ட சியேனயாகமே அனர்த்தரூபமாய் ஈண்டு அர்த்த பதத்தினால் விலக்கப்பட்டு அதர்மமெனப் படும். ஆததாயிவதத்தில் தோஷமில்லை என்பது முதலிய வசனம் க்ஷத்திரியர்களின் விஷயம்.

இவ்விதம் ஸூத்திரத்திலுள்ள **चोदना** என்னும் பதத்திற்குப் பிரவிருத்தியைச் செய்விக்கும் வாக்யம் என்று பொருள் கொண்டு பிரவர்த்தகமான விதி வாக்யத்தால் விதிக்கப்பட்ட சியேனயாகத்தை விலக்குவது அர்த்த பதத்திற்குப் பிரயோஜனமென்று சாபர பாஷ்யத்தில் பகவான் சபரஸ்வாமியினால் கூறப்பட்டது.

प्रवृत्तौ वा निवृत्तौ वा या शब्दश्रवणेन धीः ।
सा चोदनेति सामान्यलक्षणं हृदयेस्थितम् ॥

"சப்தத்தின் சிரவணத்தினால் பிரவிருத்தியிலோ நிவிருத்தியிலோ யாதொரு புத்தி உண்டாகின்றதோ அதுவே சோதனையென்று பாஷ்யகாரருடைய ஹிருதயத்திலிருக்கும் சோதனையின் ஸாமான்யலக்ஷணம்" என்று வர்த்திகத்தில் கூறியபடி **चोदना** என்னும் பதத்திற்குப் பிரவிருத்தி செய்விக்கும் விதி வாக்யம் நிவிருத்தி செய்விக்கும் நிஷேதவாக்யம் என இரண்டு வாக்யங்களும் பொருளெனக்கொண்டால் நிஷேத சோதனையாகிய நிஷேதவாக்யத்தைப் பிரமாணமாகக்கொண்ட பிரும்மஹத்தி களஞ்சபக்ஷணம் முதலிய சியேனயாகம்போல் பலதுவாராவாக அனர்த்தமாகாது, ஸாக்ஷாத்தாகவே அனர்த்தமாயுள்ள நிஷித்தகர்மங்களை விலக்குவதே அர்த்தபதத்திற்குப் பிரயோஜனம். ஆகையால் வேதத்தின் விதி வாக்யத்தால் விதிக்கப்பட்டு அனர்த்தரூபமாயில்லாது அர்த்தரூபமாயுள்ளது தர்மம்என்று தர்மலக்ஷணம் முடிந்தது. அதற்கு விபரீதமாய் வேதத்தின் நிஷேதவாக்யத்தால் நிஷேதிக்கப்பட்டு அனர்த்தரூபமாயுள்ளது அதர்மம் என்று அதர்மலக்ஷணமும்

ஸூத்திரத்தினுல் தாத்பர்யத்தால்கிடைத்தது. இவ்விதம் ஸூத்திரத்தில் தாத்பர்ய வசத்தால் அதர்மலக்ஷணமும் கூறப்பட்டு விட்டபடியால் अथातोधर्मजिज्ञासा என்னும் முதல் ஸூத்திரத்தில் अधर्मजिज्ञासा என்று இருவிதமான பதச்சேதத்தினுல் தர்மத்தையும் அதர்மத்தையும் விசாரிப்பதாகப் பிரதிஜ்ஞைசெய்து விட்டு தர்மலக்ஷணம் மாத்திரம்கூறி அதர்மலக்ஷணம் கூறுதது ஏன் என்னும் கேள்விக்கு அவகாசமில்லை.

(தொடரும்)

போலகம், சு ஸ்ரீராமசாஸ்திரி.

ஓர் நிவேதனம்.

சிஷ்டர்களால் நித்யமாய் செய்துவரும் பிர்ம்மயக்ஞத்தில் சில வித்தியாஸங்கள், காரணமில்லாமல் குடியேறி இருக்கின்றன. அதைமனதாறக் கண்டறிந்தவர்களும், இதுவரை அனுஷ்டித்து வந்த மாறுதலைவிட மனம் துணியாமல் பிடிவாதத்தாலோ வேறு யாது காரணத்தாலோ தன் மனத்தின் வழியே நடக்கிறுர்கள். पापकृत्सु च विद्वत्सु नियन्ता जन्तुरत्र कः அறிந்தோர்களே தப்புவழி நடந்தால் கேட்பதுயார்? என்பதை எண்ணி பிரஸ்தாபத்தை விசாரிப்போம். இது விஷயம் ஆர்யதர்மம் 12-புஸ், 34 ஸஞ்சிகையில் ஓர் வியாகரண சிரோமணியினுலும் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

இதன் முறை வேதத்தில் स्वाध्यायब्राह्मणम् என்கிற ஆரண்யகம் இரண்டாவது பிரச்னத்தால் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவே பிரத்தியக்ஷ சுருதியாயிருப்பதால் வேறு ஸ்மிருதியில் கூறியிருப்பதை இதில் அனுஷ்டிக்கவேண்டிய அவச்யமேயில்லை. முதலில் ஸங்கல்பித்து கைகளைமணிக்கட்டுவரையில் அலம்பி, மூன்றுதரம் தீர்த்தமருந்தி, இரண்டுதடவை உதடுகளைத் துடைத்து, ஓர்தடவை கையை அலம்பி, தலை, கண்கள், நாஸிகை காதுகள், ஹிருதயம் இவைகளை தனித்தனியாகஜலத்தால்தொட்டு தர்ப்பங்களை அதிகமாக கிழக்கு நுணிகளாகப் பரப்பி அதிலுட்கார்ந்து கிழக்குமுகமாக வேதங்களை ஓதவேண்டும். முதலில் பிரணவத்தையும், பிறகு வியாஹிருதி மூன்றுகளையும் ஓரே தட

லெவ்யாய் ஓர்தரம்கூறி பிறகு காயத்திரியை பாதம்பாதமாயும் இருபாதியாயும், ஒரேவாக்கியமாய் ஒரே மூச்சிலும் சொல்லி நான்கு வேதாதிகளையும் கூறி தன்வேதத்தை ஆதிமுதல் சக்திக்குத்தக்கவாறுசொல்ல வேதம் கூறியிருக்கிறது.

இதில் வியாஹிருதிகளைப் பிரித்து காயத்ரியின் பாதங்களுடன் முந்தியோ பிந்தியோ சேர்த்துக் கூறுவதற்கு காரணமில்லை.

ஆபஸ்தம்பர், கிருஹ்யத்தில் பிரம்மோபதேசத்தில் வியாஹிருதிகளை காயத்திரியின் பாதங்களோடு கலந்து உபதேசிக்க விதித்துள்ளார். அந்தமுறையை இந்த ச்ரௌதவிதியில் உபயோகிக்க அவசியமென்ன? வைத்தியநாத தீக்ஷிதரவர்களும் ஸ்மிருதி முக்தாபலத்தில் மேற்கண்ட முக்யமான வேதவிதியை உரைத்து சிலர், வேறுசிலர் பிர்மோபதேச முறைப்படியும் சொல்கின்றனர். என்பதால் அன்னோர் நாளிலும் இம்மாதிரி இருவகை உண்டென்றும், அதில்தான் சொல்வதை பிரமாணமாய் எண்ணுகிறவர்களின் திருப்திக்காக அவ்விதம் கேசித் பக்ஷத்தில் எழுதியிருக்கிறாரென்று ஊஹிக்கவேண்டியிருக்கிறது.

பிர்மோபதேசம்போல் காயத்ரியை உச்சரிக்க வேண்டுமென்றவிடங்களான உதகசாந்தி, பிரதிஸாமஜபம் இவைகளில் மேல்கண்ட மூன்றுவிதத்துக்குமேல், நான்காவதாக காயத்ரியை பிரணவ வியாஹிருதி பூர்வகமாகக் கூறிவருவதும் நியாயமில்லாததென்றே இங்கு பிரஸ்தாபத்தை அனுஸரித்துக் கூறவேண்டியிருக்கிறது. பிரகிருதத்தில்

> तन्त्रत्रयं काठकञ्च वैश्वदेवमनूंस्तथा ।
> मन्त्रप्रश्नौ पुनश्चैवं ब्रह्मयज्ञेक्रमं विदुः ॥

ஸம்ஹிதை, சாகை, ஆரண்யகம், காடகம், வைச்வதேவ மந்திரங்கள், மந்திரப் பிரச்னங்கள் இவைகளை முறையே தன் சக்திக்குத்தக்கவாறு ஜபித்து மற்றும் சில மந்திரங்களை ஜபித்து முடிவான **नमो ब्रह्मणे** என்னும்ரிக்கை மூன்றுதடவைஜபித்து கைகளை அலம்பினால் பூர்த்தியடைகிறது.

இம்மாதிரி வேதம் முழுவதும் ஓதாதவர்களாயிருந்தால் முன்போல் விதிகளை அனுஷ்டித்துவந்து தன்வேதம் ஓதும் பிரகாணத்தில் புருஷஸூக்தத்தையேனும் ஓர் ரிக்கையேனும் யஜுஸ்

ஸையேனும் ஓர் ஸாமத்தையேனும் ஜபித்து அல்லது வியாஹிருதி யோடுகூடிய सत्यं तपश्श्रद्धायां जुहोमि என்றுவது ஜபித்து முடிவு மந்திரத்தை மூன்றுதரம் சொல்லவேணும். இதிலும் வியாஹிருதியினுல் ஜலத்தை பரிஷேசனம் செய்துவருகிறுர்கள். இதுவும் வழக்கமென்று சொல்லாமலேயே ஸாதிக்கவேண்டி இருக்கிறது.

भूर्भुवस्सुवस्सत्यं तपश्श्रद्धायांजुहोमीत्यभिव्याहरेत् ।

என்றிருப்பதால் இந்த மந்திரம் வேதஸ்தானத்தின் பிரதிநிதியாகிற படியால் ஜபிப்பதே யுத்தமாகிறது. பரிஷேசனமும் அர்த்தஜாதீ நியாயமாய் பாதிக்காய் கரிக்கும் பாதிகாய்விரைக்கும் ஆகிறது, சுருங்கச்சொல்லில்

1. வியாஹிருதியின் பிரிவுகளை காயத்திரீயின் பாதங்களோடு சொல்வதும்.

2. பிரணவ வியாஹிருதியின் பூர்வகமாக நான்காவது தடவை முழு காயத்திரியை ஜபிப்பதும்

3. நான்குவேத ஆதிகளின் ஜபத்துக்குப்பிறகு வியாஹிருதியால் ஜலத்தைப்பரிஷேசனம் பண்ணுவதும், மூலாம்நாயத்துக்கருத்தில்லாதவைகளென்றேற்படுகிறது. இந்த மூன்று தவிர மற்றவைகளில் உத்தேசமில்லாததினுல் சில பாகங்கள் எழுதாமல் விடப்பட்டிருக்கிறது. அவைகளை ஆசாரம்போல் அநுஷ்டிப்பதில் ஆக்ஷேபமில்லை. சுபம்.

'கிருஹ்யக்ஞ' வீ. உமாமகேசுவர சாஸ்திரி.

ஸ்ரீ சங்கரஜயந்தி.

(காட்டு மன்னுர்கோவில்.)

ஸ்ரீ சங்கரஜயந்திவைபவம் சென்ற ஆண்டுகள்போல், இவ் வருஷமும் ஸ்ரீமான் நடேச சாஸ்திரிகளின் ஸ்ரீ சங்கரவிலாசத்தில் விமரிசையாக ஸ்ரீமதாசார்ய பூஜை, பாஷ்யபாராயணுதிகளுடன் நடந்தேறியது. பதினுன்குலகிலும் கிடைப்பதற்கரிய மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அளிக்கும் ஸ்ரீமதாசார்ய மூர்த்தியின் வைபவம் பதினுன்காவதாண்டாக இவ்வருஷம் பக்தியுடனும் சிரத்தையுடனும் பிராம்மணர்களாலும் சிறப்பாய் செய்விக்கப்பட்டது. அடுத்த வருஷத்தில் ஐந்துநாள் உத்ஸவமாக நடத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. "ஆசார்யபாதரேணு"

'கிருஹ்யக்ஞ' வீ. உமாமகேசுவர சாஸ்திரி.

உ

சிவமயம்.

மண்டைக்குளத்தூர் என்னும் கிராமத்தில் 24—4—31 முதல் இரண்டுநாள் கொண்டாடப்பட்ட ஸ்ரீமத் சங்கரஜயந்தி மகோத்ஸவத்தில் ஸ்ரீ வேத வேதாந்தப் பிரகாச மூர்த்தியாக விளங்கும் உலககுரு பரமாசார்யாளாகிய ஆதி சங்கராசாரிய ஸ்வாமிகள் துதியாகப்பாடிய—

ஆசார்யபாத சரணபஞ்சகம்.

நேரிசை வெண்பா.

1. காலடிவந் தான்ம உலகம் கடைத்தேறக்
காயிடி தந் தாண்ட கருணமுகில்—ஆலடிவாழ்
சங்கரர்தம் கூறுக் தாணிபுகழ் சற்குரு ஸ்ரீ
சங்கரர் பூம் பாதம் சரண்.

2. சாரலர்தம் வாதமெலாம் தர்க்கமுறை யால்தகர்த்துப்
பாரிலகு ஆறுமதம் பாலித்து—நேரிலழியோர்
பங்கரர்தங் கூறுகப் பார்வந்த தெய்வகுரு
சங்கரர் பூம் பாதம் சரண்.

3. இமய முதற் சேதுவரை வேதமுழக் கெங்கும்
அருமையுய்வகை ஐந்துமடம் நாட்டும்—நமையாளும்
ஐங்கரர்தந் தைகூறு அப்புவி போற் றுன்றகுரு
சங்கரர் பூம் பாதம் சரண்.

4. மலையுச்சித் தீபமென மாண்பார் அத்வைத
நிலை மெச்ச ஓங்கி நிலவத்—தலைமைச்சீர்
பொங்கரர்தங் கூறுப் புவியுய்யப் போந்தகுரு
சங்கரர் பூம் பாதம் சரண்.

5. விலை மதிக்க வொண்ணாத வேதாந்த உண்மை
கலை மதியார் கண்டு கதி காணத்—தலைமதியம்
தங்கரர்தங் கூறுச் சகத்தொளிரும் ஞானகுரு
சங்கரர் பூம் பாதம் சரண்.

இங்ஙனம், பரமாசார்யாள் திருவடிக்கு வழிவழித்தொண்டு பூண்டொழுகும்,

தாஸன்,

வே. முத்துஸாமி ஐயன். எம். ஏ., எல். டி.,
பாலபாடசாலைப் பரிசோதகன் போளூர்,
வட ஆற்காடு ஜில்லா.

மதமும், மதஸ்தர்களும்.

(301-வது பக்கத்தொடர்ச்சி)

பிரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்கள் இம்மதுரைமாநகரில் ஹிந்துமதம் அனாதி 2. தர்மாதர்மதத்துவம், 3. ஸாதன சதுஷ்டயம், 4.அத்வைதம் வைதிகமே,5.ஸந்தியோபாஸ்திமகிமை 6. பக்தியின் பெருமை, என்ற விஷயங்களைப்பற்றி ஒவ்வொருநாளாய் உபன்யசித்து வரும்போது 4-வதுவிஷயம் வந்ததும் இவ்விதம் அத்வைதம் வைதிகமே என்று கூறுவானேன். யாரேனும் அவைதிகமெனக் கூறினரோவென ஸபையோர்களில் அனேகருக்குப் பெரியஆசங்கைத் தோன்றலாயிற்று. அப்போது இன்னார் அவைதிகமெனக் கூறிக்கொண்டே இருக்கிறாரென்றதும் அவ்விதம் ஏன் சொல்கிறேனென்பதற்கு சுவாமிகள் கூறியகாரணங்களையும் சொன்னார். அதுதான் இங்கு நம் ஆஸ்திகர்கள் கவனிக்கவேண்டியது. ஸ்வாமிகள் சொல்லும் காரணமாவது.—

1. ஒரு காலத்தில் லோகமான்ய திலகரை ஸ்வாமி சந்தித்தபோது அவர் துவைத மதமும் ஓர் மதமாவென்று கேட்டாராம்.

2. மைசூர் பண்டிதரான லக்ஷ்மீபுரம் ஸ்ரீனிவாஸாசார் என்பவரொருவர் ஒரு சமயம் அத்வைதமதம் சுருதிஸம்மதமுள்ளதல்ல என்று புராணத்தில் சுலோகமிருப்பதாய் வெளியிட்டனராம். பிறகு அவரே மற்றுமோர் ஸமயத்தில் அந்த சுலோகத்தை யாரோ த்வைதபுராணமத்தியில் சேர்த்துவிட்டார் என்று சொல்லிவிட்டாராம்.

3. மதுரையிலிருந்து ஒரு சாஸ்திரியார் அத்வைதமதம்வைதிகமென்று தன் முன்னிலையில் வந்து ஸ்தாபிக்கிறேனென்றும் இன்ன தேதிக்குள் வருகிறேனென்றும் எழுதிய அவர் வரவில்லையாம். இது ஒரு கோபகாரணமாம். ஆகவே இம்மூன்றுகாரணத்தால்தான் அத்வைதம் அவைதிகம் என்றுசொல்லஆரம்பித்தாராம்.

இவ்விஷயத்தில் நாம்மட்டிலும் வேண்டாம். அவாது சிஷ்யகோடிகளும் விசிஷ்டாத்வைதிகளும் சேர்ந்தோ தனித்தனியோ

ஆலோசிக்கட்டும். பாருங்கள் இலகாதுகாலம் சென்று எத்துணை வருடங்களாயின. எக்காலத்திலோ கேட்ட அவருக்கு இன்று பதிற் கூறவேண்டும்? ஸ்ரீனிவாஸாசாரியாரின் பேரில் கோபம் வந்ததற்காக அவரது மதம் தவறு என்று சொல்லாமல் அந்தக் கோபம் அத்வைதத்தில் பாயக்காரணம்யாது? வருகிறேனென்ற சாஸ்திரியார் வாராததால் அதற்கும் அத்வைதமதமா அகப்பட்டுக் கொண்டது. தவிர நேற்றல்லவா வருகிறேனென்றவர் வாராமல் இருந்தார். அதற்கு முன்னமேயே அத்வைதம் அவைதிகமென்று சொன்னதற்கு முன்னிரண்டுதான் காரணமாம் போலும். கும்ப கோணத்தில் வந்து கூறியதறகு 3-வது காரணம்போலும். இவ் விதம் கூறும் காரணம் பொருத்தமுடையதாகுமாவென்று மற்ற இருமதஸ்தர்களும் ஆராய்ந்து கூறட்டும். இவ்விதம் ஸ்வாமிகள் கூறியதும் பிரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமிசாஸ்திரிகள் நேரில் இதுஎன்ன காரணம் ஒன்றுக்கொன்று பொருத்தமுள்ளதல்லவே. வீணாய் அத்வைத மதத்தை நிந்திக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு எங்க ளுக்கும் நோடீஸ் கொடுத்து வரவழைத்திருக்கிறீர்கள். இவ்வ சனத்தைக் கேட்டுக்கொண்டு அத்வைதி எவனும் சும்மா இருக்க மாட்டான் வாதத்திற்கு தயார் என்று கூறியவுடன் ஸ்வாமிகள் ஒருபடி இறங்கி அப்படித்தான் தாத்பர்யங்கள் உங்களுக்கு வரு த்தமானல் வாதம் வேண்டாம். தத்வவிசாரத்திற்காகத்தான் அழைத்தேனென்றனராம். அதற்கு பிரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமிசாஸ் திரிகளவர்கள் தத்வவிசாரத்திற்கு தாங்கள் எங்களை வற்புறுத்தி அழைக்கக் காரணமில்லை. நாங்கள் வேறு மதஸ்தர்களாதல்பற்றி தங்களிடம்வந்து தத்வவிசாரம் செய்து தத்வந்தெரிந்துகொள்ள வரவேண்டிய நியாயமில்லையென்று கூறிய பிறகு ஓர் நிபந்தனை யின் பேரில் விஷயசர்ச்சை செய்ய ஆரம்பித்தனராம். இதன்விஷ யம் நம் பத்திரிகையில் முன்னமேயேவெளிவந்திருக்கிறது.

(இன்னும்வரும்)

M. N. சுப்ரமண்யசாஸ்திரிகள்.

கோவல் வீரட்டானம் ஆர்யதர்மாபிவர்த்தினி பிராமணமஹாசபை.

ஷெ ஸபைகளின் சார்பாக நிகழும் ப்ரஜாபதி நாமஸம்வத்சரம் சித்திரைமீ 10௳ குருவாரம் (24—4—31) ஸ்ரீ சங்கர ஜயந்தி மகோத்ஸவ தினத்தை முன்னிட்டு ஸ்ரீ ப்ரகன்னாயிகி அம்பாள் ஸன்னிதி மண்டபத்தில் ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாளின்படங்களை வைத்து அலங்கார ஆராதனைசெய்வித்து, ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ சங்கரவிஜயத்தை படனம்செப்விக்கப்பட்டு ஷெ சரித்திரம் முடிந்ததும் வந்திருந்த மஹாஜனங்களுக்கு சந்தனம், தாம்பூலம், பானகம் முதலிய விநியோகாதிகள் செய்வித்து ஸ்ரீ மதாசாரிய மகிமையை எல்லோராலும் கொண்டாடப்பட்டு ஷெ மகோத்ஸவம் மங்களகரமாய் முடிவடைந்தது.

சுபம். K. R. சுப்பிரமணிய சாஸ்திரி.

சென்னை மடத்தில் ஸ்ரீ சங்கரஜயந்தி.

இம்மடத்தில் 18-புராணங்களையும் கேட்கவேண்டுமென ஆவல்கொண்ட பக்தர்கள் இவ்வாண்டு தாங்களே இவ்வுத்ஸவத்தை நடத்துவதென தீர்மானித்தனர். இம்மடம் கார்யகாரர் ஸ்ரீமான் சுப்ரமண்யய்யர் அரும்பாடுபட்டு இதைச் சிறப்பாக நடத்தியதுமாத்திரமில்லை பலவிடங்களிலும் நடத்ததானே முக்ய காரணமாயிருந்தார் ஜயந்திக்கு 5-நாள் முன்னுதாக உத்ஸவமாரம்பிக்கப்பட்டது. ஸ்ரீ காமகோடிபீடாதிபதிகளான ஸ்ரீ பகவத்பாதாளது ஆசீர்வாதத்தைப்பெற்று வேதவேதாந்த பாஷ்ய பாடம் செய்துவரும் ராயபுரம் பிராமண கோஷ்டியார் ஸ்ரீமான்களான குப்புஸ்வாமி அய்யர் வெங்கிட்டராமய்யர் ராமச்சந்திரய்யர் சுப்ரமண்யய்யர் கோபாலய்யர் ராமாமிருதய்யர் முதலியவர்கள் ப்ரதிதினம் பாராயணம் செய்து உத்ஸவத்திற்கும் ஸ்வாமி பின்னால் பாராயணம் செய்தனர்.

ஸ்ரீ சர்மாவின் சிஷ்யர்களான குமாரசாமிய்யர் B. A. ராமசந்திரசாஸ்திரி கச்சபேச்வர சாஸ்திரிகளும் வேதாந்த சிரோமணி

V. S. சாஸ்திரியும் குருவுடன் ப்ரஸ்தாந்த பாராயணம் செய்த னர். ப்ரதிமாலையும் உபன்யாஸமும் பஜனையும் நடந்தது. புரா ணச்ரவணம் செய்யும் பெண்மக்கள் ஸமாராதனை அபமிரிதமான வஸ்துக்களை அளித்தனர். ஜயந்தியன்று ஸ்ரீமஹாசார்ய விக்ர ஹத்தை ஸகலஸன்னுஹங்களுடன் பிராமணர்களே தூக்கி கிரா மப்பிரதக்ஷிணஞ்செய்தனர், மாம்பலம் பிராம்மணஸபை ஸ்ரீகங் காதாய்யர் ப்ரதிதினம் நிவேதன விநியோக கைங்கர்யம் புரிந்தார் வெகு விமர்சையாக இவ்வாண்டு நடந்தது.

மாம்பலம் ஜயந்தி.

ஸ்ரீமஹாசார்ய கிங்கா துரந்தரரான ஸ்ரீ கங்காதாய்யர் தனது கிருஹத்தில் ஜயந்தியன்று ஷோடசோபசார பூஜைசெய்து மாம் பலம் போக்ஸில் இரவுக்கு ஸாஹித்ய வாங்குமபூஷண ஸோம தேவ சர்மாவைக்கொண்டு ஸ்ரீ மஹாசார்ய அவதாரமும் உபதேச மும் என்பதை உபந்யஸிக்கச்செய்து உபந்யாஸகருக்கு வஸ்த்ர ஸம்மானம் செய்தார், ஸ்ரீபாணி முயற்சியால் லக்ஷார்ச்சனையு டன் திருவல்லிக்கேணியிலும் அத்யயன ஸபையாரால் திருவட் டீச்வரன் பேட்டையிலும் ஸ்ரீமான் அட்வகேட் வி. கே. பாலசுப் ரமண்யய்யரால் மைலை ஸம்ஸ்கிருத காலேஜிலும் மைலை வைதிகர் கோஷ்டியிலும் கீழமாம்பலத்திலும் ஸ்ரீ மஹாசார்ய ஜயந்தி விமர் சையாக கொண்டாடப்பட்டது.

L. ராமச்சந்திரன்.

வார விருத்தாந்தம்.

நல்லதைக்கற்கலாதா? 19௳ பாண்டியில் ரோமன் கேதலிக் வகுப்பைச்சார்ந்த கிருஸ்தவர் 10 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு பைபிள் ஓதிவைக்க உபநயநம்போல் ஓர் கர்மாவைச்செய்து வைத் தனர். நமது குழந்தைகளுக்கோ 16 வயதிற்குமேல் உபநயநம் நடக்கிறது. நமது பண்டைய ஆசாரத்தையும் ஆஸ்திகத்தையும் அடியோடு அகற்றவல்லதான ஆங்கிலக்கல்வி கற்பிக்கப்படுகிறது. அன்னியரையே எல்லாவழியிலும் ஆசார்யராகக் கொள்ளும் தற் காலத்தவர் அவரிடமுள்ள மதாபிமானத்தைக்கற்று காலத்திலுப நயம்செய்து உபயுக்தமான வேதபாகத்தையேனும் கற்பிக்க லாகாதா?

மதமேபெரிதுசுகம்பெரிதல்ல, 20உ லண்டனில் "ஞாயற்றுக் கிழமைகளிலும் நாடகம் நடத்தலாம். அதனால்கிடைக்கும் லக்ஷம் பவுனைக்கொண்டு ஆரோக்யத்தைக் கவனிக்கலாம்" என்றோர் சட்டம் காமன்ஸபையில் கொண்டுவரப்பட்டது அன்று மத விஷயத்தை கவனிக்கும் ஓய்வுநாளாதலின் பழயசட்டப்படியே அன்று நாடகம் நடத்துவோர், மதத்தைகவனிக்காமல் மனிதரை வேடிக்கைப்பார்க்க தூண்டுவதால் சிக்ஷிக்கத்தக்கவரே ஆதலால் இச்சட்டம் வேண்டாமென 15 லக்ஷம்பேர் கையெழுத்திட்டு மக ஜர் அனுப்பியிருக்கின்றனர். நம்மவரோ?

* * * * * * * *

யக்ஞோபவீதம். 20உ பத்ராக்என்ற விடத்தில் யாதர்ஸபை நடந்தது 100 சிறுவர்களுக்கு யக்ஞோபவீததாரணம் செய்வித் தனர். அதேஸபையில் தீண்டாமையகற்றல் பெண்சுதந்திரம் முதலிய தீர்மானங்கள் செய்யப்பட்டன. பரஸ்பரவிருத்தமான இவர்துசெயலைக் கண்டிப்பதைவிட; நாமிதிலிருந்து கற்கவேண்டி யதை கவனிப்போம் தற்கால உலகில் இதற்கு எவ்வளவு மதிப்பு வைக்கபட்டிருக்கிறதென்பதை நினைக்க உள்ளமுருகும் இதன் பெருமையை வேதம் புகழ ஆஸ்திகரென்போரும் சிலர் உணர்ந் தோ, உணராமலோ அதில் சாவி, பயத்தங்காய் தாழ்த்தி முதலிய வைகளைத் தரிக்கின்றனர். எத்தினை அறுதல், எத்தினைமுடிச்சு, இரண்டுவடம் நாலைந்துவடம்தரித்தல், ஜலமலவிஸர்ஜனகாலத்தில் உபவீதமாகவே தரித்தல், கீத்துச்சந்தனமிட இதை உபயோகித் தல் மற்றும் பலபல சொல்ல எழுத அஞ்சுகிறோம். பரமபவித்ர மான மதசின்னம், கர்மாங்கமென உணர்ந்து சுத்தமாக ரக்ஷிக்க வண்டும்.

* * * * * * * *

மானிடஉடலில் மிருகஜன்மம். 20உ நாகபுரியில் மருமக ளிடம் கோபங்கொண்ட ஓர் மாமனார் மாமியார் அவர்தங்கைமூவ ரும் சேர்ந்து 16 வயது மருமகளை நிர்வாணமாக தூணில்கட்டி கீழே மிளகாய்நெடியேற்றி உடலில் பழுக்கக்காச்சிய இரும்பினால் சூடுபோட்டார்கள். இவர்களை ஸமூகத்தார் ஜாதிப்ராஷ்டம் செய்து பெண்ணை காத்துவருகின்றனர். கோபத்திற்கு இடமளித்தால் எல்லையில்லாது நம்மை இழுத்துச்செல்லும். இத்தகையோரை மிருகப்பறவி என்றல்லாது வேறென்ன சொல்லுவது?

இரண்டும் நல்லதல்ல. 21உ ஆமதாபாத்தில் திகம்பராய் சென்ற மூன்று ஜைந ஸன்யாஸிகள்கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஸன்யாஸிகள் ஏகாந்தமாயிருந்து அவர்மதப்படி அநுஸந்தானம் செய்வதைவிட்டு பலர் நடமாடுமிடங்களில் செல்லாமலிருக்கலாம் அரசாங்கமும் மதமென நம்புவோரை கைதுசெய்யாமல் ஹிதமாகக்கூறி பிரார்த்திக்கவேண்டும்.

* * * * * * * *

கலிமுனிகள்! 21உ ஆமதாபாத்தில் ஸ்ரீயுத காந்திபேசும்போது தன்ஆச்ரம சிஷ்யர்கள் கல்யாணம் அவச்யம் என்றால் செய்துக்கொள்ளலாம். பிறகு பிரும்மசர்யத்திலிருக்கலாம் என சொல்கிறார். இங்கு ருதுகாலத்தில் விதியெனக்கருதி ஸங்கமம் செய்தவனும் பிரும்மசாரிஎன்ற நம்முறையைப்பற்றி அவர்சொன்னதாகத் தெரியவில்லை. இவர்கள் சொன்னபடி ஆட சில சிஷ்யர் சேர்ந்துவிட்டால் எல்லோரும் முனிகளே ச்ருதிஸ்மிருதி ஸதாசாரவிருத்தமானாலும் இவர்வாக்கே வேதவாக்கு இத்தகைய கலிரிஷிகள் மலிந்துக்கிடக்கின்றனர். அறிவுள்ளோர் ஜாக்ரதையாயிருப்பர்.

* * * * * * * *

ஆவேசமா மோசமா? 22உ தென்னாற்காடு ஜில்லா நாராயணசாமிக்கவுண்டர் எனும் மாரியம்மன்கோவில் பூசாரி தூக்கு தண்டனை விதிக்கப்பட்டான். குற்றம் யாது? ஆவேசம் வந்ததாகக்கூறி ஓர் இளங்குழந்தையைக் கொன்றானாம். க்ஷுத்ர தேவதைகளை ஆராதிக்கும் பாமரர் இதுபோன்ற கார்யம் செய்வதியல்பு. சுப்ரமண்யர் முதலிய தேவர்களைப்பூஜிக்கும் சிலர், தலைவிரித்து தாளத்திற்கேற்றபடி ஆடுவதும் மற்றும் சில அநுசிதமான கார்யத்தையுஞ்செய்கின்றனர். ச்ரத்தாபக்தி புரஸ்ஸரமாக ஏகாக்ரசித்தமாய் பூஜிப்பவரிடம் இதைக் காணவில்லை. காரணம் என்ன?

* * * * * * * *

யாரைக் கேட்பது? 23உ ஸ்ரீயுதஸத்யமூர்த்தி தேசத்திற்காக சிறைசென்றவர் ப்ராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டுமா என ஒருவர் கேட்க 'ப்ராயச்சித்தம் அநாவச்யம்' என பதிலிறுத்தார். தர்மஸந்தேஹம் வந்தால் சாஸ்த்ரசர்ச்சை செய்து நன்கு தர்மாநுஷ்டானம் செய்து விருப்பு வெறுப்பில்லாத தர்மகாமர்களைக் கேட்கவேண்டுமென வேதங்கூறுகிறது. இக்கேள்வி கேட்

டவருக்கு ஷை துணம்நிறைந்த பெரியார் மடாதிபதிகள்பரமாசார்யாள் கிடைக்கவில்லையோ ? பேபரில் கேட்டார். பேபர் பதில் சொல்லிவிட்டது. தர்மாபிமானிகள் இதை ஆதரிப்பரோ ?

* * * * * * * *

நல்லெண்ணமா ? 29௳ நாகர்கோவிலில் சாரதாசட்டத்தை மீறி விவாஹம் நடக்கப்போவதாக நிருபர் ஒரு பத்ரிகைக்கு ஸமாசாரம் எழுதுகிறார். க்ரமமாக நடக்கவேண்டியதைப்பற்றி விசேஷமென்ன ? அனேகமாக தேசியபத்ரிகைகளுக்கும் அதன் நிருபர்களுக்கும் சீர்திருத்தத்திலேதான் அபிருசி. ஆதலின் இதை எந்த எண்ணத்தால் வெளியிடுகிறாரோ ?

* * * * * * * *

க்ஷேமமாயின் கேடுக்கலாமா? 22௳ திருச்சியில் ஓர் தேசத்தலைவர்பேசும்போது பலஜாதிமதங்களால் இந்தியாவுக்குக்ஷேமமே அன்றி கெடுதலில்லை என்றார். இது உண்மையாயின் ஜாதிபேதத்தையழிக்க இவரும் காங்கிரசும் முன்வருவதேன் ? இவர்போன்றவர் செயலால்தான் பல மதாபிமானிகள் காங்கிரஸ்ஸிலிருந்து விலகினர். இவர் சொற்படி இவர் நடப்பரா ?

* * * * * * * *

கோண்டவர் பலமிருந்தால் 24௳ ஓர் தேசிய பத்ரிகை இங்கிலாந்தில் உண்மை என்ற பத்ரிகையில் உண்மைவாதி என்றொருவர் ஹிந்துமதத்தைத் தூஷிப்பதாகக்கூறி கண்ணீர் விடுகிறது. நம்மவரும் ஷை பத்ரிகைகளும் பூர்ணமாக நமது மதத்தைக் கைப்பற்றிப் போற்றிவந்தாலன்றோ மற்றவர் மதிப்பர். தங்களுக்கு இஷ்டமானதைப் போற்றுவது, மற்றதைத் தூற்றுவதெனில் இக்கதிதான்.

* * * * * * * *

விழித்துக்கொள்கிறார். ஜினிவாவில் ஸர்வதேசஸங்கம் நடைபெறுகிறது. ஸ்திரீகள் அழகுப்போட்டி போடுவதால் பாதிவ்ரத்யம் முதலிய நற்குணங்கெடுவதாகவும் ஆதலால் அழகுப்போட்டியை நிறுத்தவேண்டுமென சிலர் கேட்கின்றனர். இதற்கு ஷை ஸபை செவிசாய்க்காது. அது எப்படியாயினும் பாதிவ்ரத்யவிஷயத்தில் சிலர் விழித்துக்கொண்டதைக்கண்டாவது இவ்விஷயத்தில் நாகரீகமயக்கத்தால் உறங்க ஆரம்பிக்கும் நம்நாட்டவர் கவனிக்கட்டும்.

பாக உத்யோகமே! சென்னை ஹைகோர்டில் இரண்டு பெண் வக்கீல்களிருக்கின்றனர். பள்ளிக்கூடம், ஆஸ்பத்ரி, தாலூக், ஜில்லா சட்டஸபை முதலியவிடங்களிலும் பெண்மக்கள் ஸ்தானம் வஹிக்கின்றனர். பாம்பே சட்டகலாசாலையில் மிதி பாய் என்பாள் ஆசார்யபதவியை வஹிக்கிருள். தேசியவேலைக்கும் இவர்கள் வேண்டியிருக்கிறது. பாககார்யத்தை பொட்லர்போல் யாராவது கிடைத்தால் வைத்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் புருஷர்களே கரண்டியைக் கையிலேந்தவேண்டும். இதே இப்படியிருக்க கற்பின் கதி யாது ?

* * * * * * * *

யார் கோறினர் ? ஸ்வராஜ்யத்தில் மதம் மாற்றும் பாதிரிக்கிடமில்லை என ஸ்ரீயுதகாந்தி சொன்னாராம். பாதிரிஉலகம் அலருகிறது, புகழ்ந்தவரெல்லாம் இகழ்ந்து பேசுகிறார். இந்தியாவுக்கு கிருஸ்தவமதத்தைக் கொடுத்துதவியதுபோல் வேருபகாரமில்லை என்கிறார் ஒருவர். இவ்வுதவி வேண்டுமென இவர்களை வருந்தி அழைத்தது யார் ? இந்த க்ஷணமே இதை நிறுத்தட்டுமே

* * * * * * * *

அன்றே மறப்பது நன்று. மத்வஸ்வாமிகள் சொன்னதைக் கண்டு நமது பத்ரிகையில் பலர் பலவிதமாக எழுதுகின்றனர். அவர் தமிழறியார் இதைப்படியார், அவரறியாது ஆயிரம் எழுதி பயனென்ன? இதர்மூலம் இதைக்கேட்டு ஒரு ஸமயம் த்வேஷமதிகமாகலாம். ஆதலால் இச்சமயம் இக்குறளை நினைவூட்டுகிறேன். நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லதென்றே மறப்பது நன்று.

ஸ்ரீவத்ஸ வே. சோமதேவ சர்மா.

* * * * * * * *

வடஆற்காடு ஜில்லா 2-வது பிராமணமஹாநாடு. நாளது பிரஜாபதிநாமஸம்வத்ஸரம் சித்திரை-மீ 9, 10உ (22, 23-4-31) புதன் வியாழன் இந்த தினங்களில் போளூர்தாலூகா மண்டகொளத்தூர் அக்ரஹாரத்தில் பிரம்மஸ்ரீ மார்க்கபந்து தீக்ஷிதரவர்கள் பி. ஏ. அக்ராஸனத்தின்கீழ் ஷை மஹாநாடு நடைபெற்றது.